ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ தாமுகக்கும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாமுகக்கும் ॥

திருவரங்கத்துறை செல்வனைக் காமுறல்

‡தாம் உகக்கும் தம் கையில்⋆ சங்கமே போலாவோ⋆
யாம் உகக்கும் எங்கையில்⋆ சங்கமும் ஏந்திழையீர்!⋆
தீ முகத்து நாகணை மேல்⋆ சேரும் திருவரங்கர்⋆
ஆ! முகத்தை நோக்கார் ஆல்⋆ அம்மனே! அம்மனே! (1)

எழில் உடைய அம்மனைமீர்!⋆ என் அரங்கத்தின் அமுதர்⋆
குழல் அழகர் வாய் அழகர்⋆ கண் அழகர்⋆ கொப்பூழில்
எழு கமலப் பூ அழகர்⋆ எம் மானார்⋆ என்னுடைய
கழல் வளையைத்⋆ தாமும் கழல் வளையே ஆக்கினரே (2)

‡பொங்கோதம் சூழ்ந்த⋆ புவனியும் விண் உலகும்⋆
அங்காதும் சோராமே⋆ ஆள்கின்ற எம் பெருமான்⋆
செங்கோல் உடைய⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எங்கோல் வளையால்⋆ இடர் தீர்வர் ஆகாதே (3)

மச்சணி மாட⋆ மதிள் அரங்கர் வாமனனார்⋆
பச்சைப் பசுந் தேவர்⋆ தாம் பண்டு நீர் ஏற்ற⋆
பிச்சைக் குறை ஆகி⋆ என்னுடைய பெய்வளை மேல்⋆
இச்சை உடையரேல்⋆ இத் தெருவே போதாரே (4)

பொல்லாக் குறள் உருவாய்ப்⋆ பொற் கையில் நீர் ஏற்று⋆
எல்லா உலகும்⋆ அளந்து கொண்ட எம் பெருமான்⋆
நல்லார்கள் வாழும்⋆ நளிர் அரங்க நாகணையான்⋆
இல்லாதோம் கைப் பொருளும்⋆ எய்துவான் ஒத்துளனே (5)

கைப் பொருள்கள் முன்னமே⋆ கைக் கொண்டார்⋆ காவிரி நீர்
செய்ப் புரள ஓடும்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எப்பொருட்கும் நின்று⋆ ஆர்க்கும் எய்தாது⋆ நான் மறையின்
சொற் பொருளாய் நின்றார்⋆ என் மெய்ப் பொருளும் கொண்டாரே (6)

www.prapatti.com

உண்ணாதுறங்காது⋆ ஒலி கடலை ஊடறுத்துப்⋆
பெண் ஆக்கை யாப்புண்டு⋆ தாம் உற்ற பேதெல்லாம்⋆
திண்ணார் மதிள் சூழ்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எண்ணாதே தம்முடைய⋆ நன்மைகளே எண்ணுவரே (7)

‡பாசி தூர்த்துக் கிடந்த⋆ பார் மகட்குப்⋆ பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வாரா⋆ மானம் இலாப் பன்றியாம்⋆
தேசுடைய தேவர்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
பேசி இருப்பனகள்⋆ பேர்க்கவும் பேராவே (8)

கண்ணாலம் கோடித்துக்⋆ கன்னி தன்னைக் கைப் பிடிப்பான்⋆
திண் ஆர்ந்திருந்த⋆ சிசுபாலன் தேசழிந்து⋆
அண்ணாந்திருக்கவே⋆ ஆங்கவளைக் கைப் பிடித்த⋆
பெண்ணாளன் பேணும் ஊர்⋆ பேரும் அரங்கமே (9)

‡செம்மை உடைய⋆ திருவரங்கர் தாம் பணித்த⋆
மெய்ம்மைப் பெரு வார்த்தை⋆ விட்டுசித்தர் கேட்டிருப்பர்⋆
தம்மை உகப்பாரைத்⋆ தாம் உகப்பர் என்னும் சொல்⋆
தம் இடையே பொய்யானால்⋆ சாதிப்பார் ஆர் இனியே! (10)

॥ஆண்டாள் திருவடிகளே சரணம்॥

www.prapatti.com